செ. கு. எண்: 246 நாள் :12.09.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 12 .9.2013

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், நல்லாக் மதுரா கிராமம், சிப்காட் தொழிற்பேட்டை அருகே 18.8.2013 அன்று கழிவுநீர் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது விஷ வாயு தாக்கியதில் நல்லாக் மதுரா கிராமம், சிப்காட்டைச் சேர்ந்த திரு. அர்ஜுனன் என்பவரின் மகன் கஜேந்திரன் மற்றும் திரு. நடராஜன் என்பவரின் மகன் மணி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், அத்திப்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் வடசென்னை அனல்மின் நிலையத்தில் தனியார் நிறுவன ஒப்பந்த கூலியாக பணி புரிந்து வந்த ஜார்கண்ட் மாநிலம், மொராதே கிராமத்தைச் சேர்ந்த திரு. இக்பால் ராய் என்பவர் 18.8.2013 அன்று பணியில் இருக்கும் போது மாடியிலிருந்து தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்த கஜேந்திரன், மணி மற்றும் இக்பால் ராய் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், நல்லாக் மதுரா கிராமம், சிப்காட் தொழிற்பேட்டை அருகே 18.8.2013 அன்று கழிவுநீர் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது விஷ வாயு தாக்கியதில் நல்லாக் மதுரா கிராமம், சிப்காட்டைச் சேர்ந்த திரு. வேலாயுதம் என்பவரின் மகன் பாலச்சந்திரன் விஷவாயு தாக்கி மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியையும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், அத்திப்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் வடசென்னை அனல்மின் நிலையத்தில் தனியார் நிறுவன ஒப்பந்த கூலியாக பணி புரிந்து வந்த ஜார்கண்ட் மாநிலம், மொராதே கிராமத்தைச் சேர்ந்த திரு. சுபின் என்பவர் மாடியிலிருந்து தவறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாயும், விஷ வாயு தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாலச்சந்திரன் மற்றும் மாடியிலிருந்து தவறி விழுந்து பலத்த காயமடைந்துள்ள சுபின் ஆகிய இருவருக்கும் தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9